**IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM**

O.S. No. 119/2016

Deposition of PW1 witness of Plaintiff/Petitioner/ Defendant /Respondent Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X 1872 on the 17th day of July 2023.

| | |
|---|---|
| Name : கொண்டம்மாள் | Caste: |
| Father / Husband's Name: வருதன் | Calling: |
| Village : | Religion: |
| Taluk : | Age: |
| Date : | |

**17-07-2023**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1971ம் வருடத்திய பிரதிவாதிகளுடைய தகப்பனாருடன் ஏற்பட்ட குத்தகை ஒப்பந்த பத்திரம் என்னிடம் உள்ளது. அந்த ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்யதுள்ளேன். அதன் பின்னர் நான் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்த குத்தகையை புதுபித்து கொண்டேன் என்றால் அவர்கள் யாரும் வரவில்லை. 07.01.1982ம் வருடத்தில் 1ம் பிரதிவாதியுடன் ஒரு குத்தகை ஒப்பந்தம் மீண்டும் செய்துகொண்டேன் என்று சொன்னால் ஆமாம். அதன் பின்னிட்டு அந்த குத்தகை ஒப்பந்தம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்த குத்தகையை புதுபிக்கப்பட்டது என்று சொன்னால் அவர்கள் யாரும் வரவில்லை. என்னுடைய வழக்குரையில் 1994ம் வருடம் 1ம் பிரதிவாதியுடன் நான் குத்தகை ஒப்பந்தம் செய்து கொண்டேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ரூ. 10,000/- பணம் பெற்றுக்கொண்டு மீதி தருவதாக

கூறிய ரூ. 49,000/– தராததால் நான் காலிசெய்யவில்லை என்றால் ஆமாம். தாவா குத்தகை சொத்தை பொறுத்து வா.த.சா.ஆ–A8, வா.த.சா.ஆ–A9 மற்றும் வா.த.சா.ஆ–A13 உயில்கள் எழுதி வைத்துள்ளேன் என்றால் ஆமாம். 1990ம் ஆண்டு வா.த.சா.ஆ–A12 மூலம் 1ம் பிரதிவாதியுடன் ஒரு பஞ்சாயத்து முச்சலிக்கா எழுதிக்கொண்டேன் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள கந்தாய ரசீது மற்றும் வரி ரசீது ஆகியவற்றில் பத்துமலை என்பவர் பெயர் உள்ளது என்றால் ஆமாம். வா.த.சா.ஆ–A2 வீட்டு வரி ரசீது பத்துமலை என்பவர் பெயர் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என் பெயரில் உள்ளது. அந்த வீட்டை நான் கட்டினேன். 1961ம் ஆண்டே வீட்டு வரி ரசீதின் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்துக்களை பார்வையிட்டார் என்றால் ஆமாம். தாவா சொத்து வழக்குரையில் வீடு பற்றி நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1990ம் வருடம் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டு ஒரு முச்சலிக்கா எழுதிக்கொண்டோம் என்றால் ஆமாம். வா.த.சா.ஆ–A12 முச்சலிக்காப்படி நான் பிரதிவாதியிடம் இன்றைய தேதி வரை தாவா சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்திற்கான பட்டா 2ம் பிரதிவாதி பெயரில் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தில் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றும், அவர்கள் பெயரில் தான் வருவாய் துறை ஆவணங்கள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் 1982, 1985, 1991 ஆண்டுகளில் நான் குத்தகை ஒப்பந்தத்தை பிரதிவாதிகளுடன் புதுப்பித்துக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. சொத்து என்னுடையதுதான். வருவாய் கோட்டாட்சியர் பிரதிவாதிகள் பெயரில் கொடுத்த பட்டாவை இரத்து செய்துவிட்டார்கள் என்பது சம்மந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் பட்டாவில் என்

பெயரை சேர்த்துக்கொண்டேன். தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்று சொன்னால் யாரும் என்னிடம் வரவில்லை. வா.த.சா.ஆ–A8, வா.த.சா.ஆ–A9 மற்றும் வா.த.சா.ஆ–A13 உயில்கள் எழுதிய காலக்கட்டத்தில் நான் பிரதிவாதிகளுடனான ஒப்பந்தத்தை கால நீட்டிப்பு செய்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ–A12 பஞ்சாயத்து முச்சலிக்கா தாவா சமயத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், பின்னிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்குடன் தாக்கல் செய்துள்ளேன். வா.த.சா.ஆ–A12 முச்சலிக்கா ஏற்படுத்தப்பட்ட பிறகு 15.04.1991ல் வா.த.சா.ஆ–A8 உயிலை நான் எழுதி வைத்துள்ளேன் என்றால் ஆமாம். பிரதிவாதிகள் தான் தாவா சொத்தின் உரிமையாளர்கள் என்றும் வா.த.சா.ஆ–A12 முச்சலிக்காவை நான் ஏற்படுத்திக் கொண்டேன் என்று சொன்னால் பிரதிவாதிகள், என்னிடம் எந்த பிரச்சனைக்கும் வரவில்லை. பிரதிவாதிகள் தாவா சொத்து அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதனால் என்னிடம் சுவாதீனம் கேட்டார் என்று சொன்னால் சொத்து எனக்கு வேண்டும் என்று நான் இந்த வழக்கை போட்டிருக்கிறேன். தாவா சொத்தில் நான் குத்தகைதாரர் என்றும், எனக்கு வேறு உரிமை ஏதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே இந்த தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.